
# சீறத்துன்னபி ﷺ

## நாள் 4



## இன்றைய தலைப்புகள்:

**நபி (ஸல்) காலத்திற்கு முன் உலகில் இருந்த மதங்களின் நிலை**

- **பகுதி 1: நபி (ஸல்) காலத்திற்கு முன் அரேபிய பகுதிகளில் இருந்த மதங்களின் நிலை**
- **பகுதி 2: அரேபிய தீபகற்பத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்த பிற மதங்களின் நிலை**
- **பகுதி 3: நபி (ஸல்) காலத்திற்கு முன் கிறிஸ்தவ மதத்தின் நிலை**
- **பகுதி 4: சல்மான் அல் ஃபார்ஸி (ரலி) அவர்களின் வரலாறு**
- **பகுதி 5: நபி (ஸல்) அவர்களுடனான சல்மான் அல் ஃபார்ஸி (ரலி) அவர்களின் சந்திப்பு**

## பகுதி 1: நபி (ஸல்) காலத்திற்கு முன் அரேபியா பகுதிகளில் இருந்த மதங்களின் நிலை:

- அரேபியா முழுவதும் சிலை வழிபாடு மிகவும் பரவலாக இருந்தது.

- அரேபியாவில் உருவ வழிபாட்டை விட்டு விலகி இருந்த மக்கள் ஒரு சிலரே இருந்தனர். இத்தகைய மக்கள் 'ஹுனஃபா' என்று அழைக்கப்பட்டனர்; அதாவது ''விலகிச் செல்பவர்கள்'' அதாவது, ஷிர்க் என்னும் பல தெய்வக் கொள்கையிலிருந்து விலகிச் சென்று, தவ்ஹீத் என்னும் அல்லாஹ்வின் ஏகத்துவம் நோக்கித் திரும்புதல். அதில் பிரபலமாக இருந்தவர் 'வரகா இப்னு நௌஃபல்' ஆவார். இவர் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதல் மனைவி கதீஜா (ரழி) அவர்களின் உறவினர் ஆவார்.

- அவர் கிறித்துவ மதத்திற்கு மாறினார். ஆனால், பின்னர் இஸ்லாத்திற்கு மாறிய முதல் ஆண் இவர் ஆவார். இன்ஷா அல்லாஹ், இதைப்பற்றி பின்னர் வரும் பகுதிகளில் விரிவாக பார்ப்போம்.

- மற்றொரு நபர் ஜைத் இப்னு அம்ர் இப்னு நுஃபைல். இவர் உமர் பின் அல்–கத்தாப் (ரலி)வின் தூரத்து உறவினர்.

- அவர் கிறித்துவம் மற்றும் யூத மதத்தை ஏற்கவில்லை. மேலும் மக்காவில் இப்ராஹிம் (அலை) அவர்களின் மதத்தில் இவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்று குரைஷிகளுக்கு வெளிப்படையாக அறிவித்தார்.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது பிரச்சாரத்தைத் தொடங்குவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர் இறந்துவிட்டார். இவரைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், ''ஜைத் இப்னு அம்ர் மறுமை நாளில் அவர் மட்டுமே உள்ள சொந்த உம்மத்தாக (ஒரே மனிதன் உம்மத்தாக) உயிர்த்தெழுப்பப்படுவார். மேலும் அவருக்கு இரண்டு தோட்டங்கள் சுவனத்தில் வழங்கப்படும்.

## பகுதி 2: அரேபிய தீபகற்பத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்த பிற மதங்களின் நிலை

- யூத மதம், கிறிஸ்தவ மதம் மற்றும் ஜோராஸ்ட்ரிய மதம் (பார்சி சமயம்) ஆகியவை அரேபிய தீபகற்பத்தைச் சுற்றியுள்ள மற்ற முக்கிய மதங்களாக

இருந்தன. இந்த மதங்களும் அரேபியாவிற்குள் நுழைந்தன.

- யூத மதத்தைப் பின்பற்றிய மக்கள் பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் ரோமானிய கிறித்தவர்களின் படையெடுப்புகள் காரணமாக தங்கள் நிலங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர்.




- அவர்களில் பெரும்பாலோர் பாலஸ்தீன பகுதிக்கு ரோமானிய ஆக்கிரமிப்பின் போது அரேபியாவிற்கு குடிபெயர்ந்தனர்.

- குறிப்பாக, அரேபியாவின் கைபர் மற்றும் தைமா பகுதியைச் சுற்றி யூதர்கள் குடியேறினர்.

- இங்கு சிலை வழிபாட்டை கடைப்பிடித்து வந்த பல அரபு பழங்குடியினர் யூத மதத்திற்கு மாறினர். இவ்வாறாக இஸ்லாம் தோன்றியபோது, அரேபியாவில் இருபது யூத குலத்தினர்கள் இருந்தனர்.

## பகுதி 3: நபி (ஸல்) காலத்திற்கு முன் கிறிஸ்தவ மதத்தின் நிலை:

- கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களை விண்ணுக்கு உயர்த்தியபின், சுமார் 30-40 ஆண்டுகளுக்குப் பிறகு, கிறிஸ்தவ மதத்தில் இரண்டு பெரிய பிரிவுகள் தோன்றின.

- இவர்களில் முதல் குழு யூத கிறிஸ்தவர்கள் என்றும், இரண்டாவது குழுவினர் செயின்ட் பவுலைப் பின்பற்றிய பவுலின் கிறிஸ்தவர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

- யூத கிறிஸ்தவர்கள் தாங்கள் யூதர்கள் என்றும், அவர்கள் மோசஸ்ஸின் (மூஸா (அலை)) சட்டத்தை பின்பற்ற வேண்டும் என்றும், இயேசு கிறிஸ்து (ஈஸா (அலை)) யூதர்களுக்கு சட்டத்தை செயல்படுத்த அனுப்பப்பட்டவர் என்றும் அவர் வாக்குறுதியளிக்கப்பட்ட மெசியா (அல்–மசிஹ் அதாவது மீட்பாளர்) என்றும் நம்பினர். இதைத்தான் முஸ்லிம்களும் நம்புகிறார்கள்.

- செயின்ட் பால் மூலம் பவுலின் கிறிஸ்டியன் குழு தொடங்கப்பட்டது. புனித பவுல் பூமியில் வாழ்ந்த காலத்தில் இயேசு கிறிஸ்துவைப் பார்க்கவேயில்லை. இயேசு பரலோகத்திற்கு அழைக்கப்பட்ட சுமார் 4 – 7 ஆண்டுகளுக்குப் பிறகு,



புனித பவுல் இயேசு கிறிஸ்துவை ஒரு தரிசனத்தில் பார்த்ததாகக் கூறினார். இதன் மூலம் அவர் ஒரு புதிய இறையியலைத் தொடங்கினார்.

- இயேசு ஒரு தூதர் மட்டுமல்ல, தெய்வீகத்தின் ஒரு அங்கம் என்றும், சட்டத்தை மாற்றுவதற்காக இயேசு வந்தார் என்றும் அவர் கூறினார். அவர் தந்தை, மகன் மற்றும் பரிசுத்த ஆவியின் கருத்துடன் கூடிய திரித்துவத்தை (ஒன்றில் மூன்று ஐக்கியம்) பரப்பினார்.

- கிறிஸ்தவ மதத்தைத் தழுவினால் அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற நற்செய்தியாக மக்களுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார். இன்று

பைபிளின் ஒரு பகுதியாக இருக்கும் புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களில் 13 புத்தகங்களை பவுல் எழுதியுள்ளார்.

- அதன்பின் 300 ஆண்டுகளாக, கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தின் அர்த்தம் என்ன என்பதையும், உண்மையில் இயேசு கிறிஸ்து யார் – அவர் ஒரு தூதரா, அல்லது கடவுளின் மகனா அல்லது கடவுளா என்பது குறித்தும் விவாதித்தார்கள்.

- இந்தக் காலக்கட்டத்தில், பலதெய்வ வழிபாட்டைப் பின்பற்றிய ரோமானியர்கள், கிறிஸ்தவர்களின் மோசமான எதிரிகளாக இருந்தனர்.

- கி.பி 312 ல், ரோமப் பேரரசர் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியது வரை இதுதான் நடந்தது.

- கான்ஸ்டன்டைன் தான் கிறிஸ்தவராக மாறிய முதல் ரோமானியப் பேரரசர். அவர் கிறிஸ்தவத்தின் ஒரு பதிப்பு மட்டுமே இருக்கவேண்டும் என விரும்பினார்.

- கி.பி 325 ல் 'நைசியா கவுன்சில்' என்று அழைக்கப்படும் ஒரு சபையை அவர் கூட்டினார். இதன் மூலம் கிறிஸ்தவ பாதிரியார்கள் மற்றும் பல்வேறு தேவாலயப் (சர்ச்) பிரிவுகளுக்கு இடையே உள்ள இறையியல் வேறுபாடுகளை தீர்க்க முயற்சிக்கப்பட்டது.

- இந்த சபைக் கூட்டத்தில் கிறிஸ்து மனிதராகவும் மற்றும் தெய்வமாகவும்



இருந்தார் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் கிறிஸ்தவத்தின் அதிகாரப்பூர்வ பதிப்பு பவுலின் கிறிஸ்தவம் தான் என்று கான்ஸ்டன்டைன் அறிவிக்கிறார்.

- அதன்பின், பவுலின் கிறிஸ்தவ முறையைப் பின்பற்றாத (இஸ்லாமிய போதனைகளை ஒத்திருந்த) யூத கிறிஸ்தவர்கள், மற்றும் பிற வகையான கிறிஸ்தவர்களையும், அவர்கள் மரணிக்கும் வரை அல்லது பவுலின் கிறிஸ்தவ முறையைப் பின்பற்றும் வரை ரோமானியர்கள் துன்புறுத்த தொடங்கினர்.

- குர்ஆன் ஸூரா அல்புரூஜ்ஜில் யூத கிறிஸ்தவர்கள் சந்தித்த இத்தகைய சித்திரவதை சம்பவங்களை குறிப்பிடுகிறது: ‘‘(நெருப்புக்) குண்டங்களையுடையவர்கள் சபிக்கப்பட்டனர். எரிபொருளுடைய நெருப்புக் குண்டம். அவர்கள் அதன்பால் உட்கார்ந்திருந்தபோது, நம்பிக்கையாளர்களை அவர்கள் (நெருப்புக் குண்டத்தில் போட்டு வேதனை) செய்ததற்கு அவர்களே சாட்சிகளாக இருந்தனர். (யாவரையும்) மிகைத்தவனும், புகழுடையோனுமாகிய அல்லாஹ்வின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டார்கள் என்பதற்காக அன்றி (வேறெதற்கும்) அவர்கள் அவர்களைப் பழிவாங்கவில்லை’’. (அல்புரூஜ் 85:4-8)

- இதனால் பெரும்பாலான யூத கிறிஸ்தவர்கள் தங்கள் இடத்திலிருந்து வெளியேறி பிற நாடுகளில் குடியேறினர்.

- ரோமானியப் பேரரசு யூத கிறிஸ்தவத்தை தடை செய்து பவுலின் கிறிஸ்தவத்தை மட்டுமே அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்ததால், அதுவே கிறிஸ்தவ மதமாக கருதப்பட்டது. இதிலிருந்து தான் ஆர்த்தடாக்ஸ் (மரபு வழி), கத்தோலிக்க மற்றும் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் வந்தனர். இன்றுள்ள கிறிஸ்தவர்களில் 99.9% இதில் அடங்குவர்.

- இயேசு கிறிஸ்து அல்லது ஈஸா (அலை) அவர்களுக்குப் பின், சுமார் 570 ஆண்டுகளுக்குப் பிறகு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கிபி 570 இல் பிறந்தார்கள். அந்த நேரத்தில், அசல் கிறிஸ்தவத்தை (யூத கிறிஸ்தவம்) பின்பற்றுபவர்கள் உலகெங்கிலும் ஒரு சிலரே இருந்தனர்.

- அசல் கிறிஸ்தவத்தை (யூத கிறிஸ்தவம்) ஒரு சிலரே பின்பற்றினார்கள் என்பதை தெளிவாக புரிந்துகொள்ள நபி (ஸல்) அவர்களின் தோழர்களில் ஒருவரான சல்மான் அல் ஃபார்ஸி (ரலி) அவர்களின் வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

# பகுதி 4: சல்மான் அல் ஃபார்ஸி (ரலி) அவர்களின் வரலாறு

- ஸஹீஹ் முஸ்லிமில் சல்மான் அல் ஃபார்ஸி (ரலி)வின் வரலாறு விளக்கமாக உள்ளது. அதன் மூலம் சில கிறிஸ்தவர்கள் மட்டுமே நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அசல் யூத கிறிஸ்தவத்தை பின்பற்றினார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம்.



- சல்மான் அல் ஃபார்ஸி பாரசீகத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தை ஜோராஸ்ட்ரிய மதத்தைக் கடைப்பிடிக்கும் தலைமை பாதிரியராக இருந்தார்.

- அவரது தந்தை கோவிலில் நெருப்பை பற்றவைத்து எரிப்பதற்கு பொறுப்பாளராக இருந்தார். இந்த வேலையில் சல்மான் தனது தந்தைக்கு உதவுவார்.

- ஒரு நாள் கோவிலுக்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு சிறிய மடத்தில் ஒரு பாதிரியாரைக் கண்டார்.

- அப்போது அந்தத் பாதிரியார் தனது கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருந்தார். அதை சல்மான் கேட்க நேர்ந்தது. சல்மான் அந்த கீர்த்தனைகளில் மயங்குவதை உணர்ந்தார்.

- சல்மான் அந்தப் பாதிரியாரிடம் அவரது மதத்தைப் பற்றிக் கேட்டார். அந்தத் பாதிரியார் தனது கிறிஸ்துவ மதத்தைப் போதிக்கத் தொடங்கினார். இதன்மூலம்

சல்மான் கிறித்தவ மதத்தால் ஈர்க்கப்பட்டு, கிறிஸ்தவராக மாறினார்.

- இதை அறிந்த அவரது தந்தை சல்மானை வீட்டில் சங்கிலியால் கட்டி வைத்துவிட்டார். அந்த கிறிஸ்தவ பாதிரியாருக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது.

- சில நாட்களில் சல்மான் அல் ஃபார்ஸி தனது வீட்டிலிருந்து தப்பித்து விட்டார். மேலும் சிரியாவில் உள்ள அசல் கிறிஸ்தவத்தைப் பின்பற்றும் பாதிரியார்களின் குழுவைக் கண்டுபிடித்து அவர்களுடன் சேர்ந்துகொண்டு அந்த பாதிரியார்கள் கூறும் அறிவுரையைப் பின்பற்ற எண்ணினார்.

- அவர் சிரியாவுக்குச் சென்று அங்குள்ள பாதிரியார்களின் போதனையை பின்பற்றத் தொடங்கினார்.

- ஒரு பாதிரியார் இறக்கும் நேரத்தில், அவர் சல்மானை அடுத்த பாதிரியாரிடம் சென்று அவரிடம் கற்றுக் கொள்ளச் சொன்னார். இதுபோல 4 முறை நடந்தது.

- அவர் நான்காவது பாதிரியாரிடம் வந்தபோது, சல்மானுக்கு சுமார் 50 வயது இருந்தது. அவரது மரணத்திற்குப் பிறகு, கிறிஸ்தவ மதத்தை சரியாக புரிந்து கொண்ட வேறு எந்தப் பாதிரியாரும் தனக்குத் தெரியாது என்று அந்தப் பாதிரியார் சல்மானிடம் கூறினார்.

- இருப்பினும், வாக்குறுதியளிக்கப்பட்டவர் வரவிருக்கும் நேரம் வந்துவிட்டது என்று அவர் சல்மானுக்கு கூறினார். அதாவது 3 அறிகுறிகளைக் கொண்ட ஒரு மனிதரைத் தேடுமாறு அறிவுரை கூறினார்.

- முதலில், அவர் பேரீச்சம்பழங்கள் நிறைந்த நிலத்தில் தோன்றுவார். இரண்டாவதாக, அவரது முதுகில் பல வண்ண முடிகள் கொண்ட தழும்பு ஒன்று இருக்கும். மூன்றாவதாக, அந்த மனிதர் பரிசுகளை ஏற்றுக்கொள்வார். ஆனால் யாசிப்பதால் கிடைக்கும் பொருளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

- சல்மான் பேரீச்சம்பழங்கள் நிறைந்த நிலத்தைப் பற்றி விசாரிக்கிறார். அது கைபர் நிலம் என்று அவரிடம் கூறப்படுகிறது.

- ஆகவே அவர் கைபருக்குச் செல்கிறார். ஆனால் செல்லும் வழியில் அவர்

கடத்தப்பட்டு அடிமையாக ஆக்கப்படுகிறார்.

- யாத்ரிபில் (பின்னர் மதீனா என்று அழைக்கப்பட்டது) வாழ்ந்த யூதர்களின் குழுவிற்கு சல்மான் விற்கப்படுகிறார். இவ்வாறாக சல்மான் மதீனாவிற்கு வந்து சேர்கிறார்.

- சில நாட்களுக்குப் பிறகு, முஹம்மது (ஸல்) என்ற மனிதர் தன்னை நபி என்று கூறிக்கொண்டு மதீனாவுக்கு குடிபெயர்ந்து வருவதாக பேச்சுக்கள் பரவ ஆரம்பித்தன. இந்த நேரத்தில் சல்மான் 80 வயதை நெருங்கி இருந்தார். அப்போதும் அடிமையாக வேலை செய்து வந்தார்.

## பகுதி 5: நபி (ஸல்) அவர்களுடனான சல்மான் அல் ஃபார்ஸி (ரலி) அவர்களின் சந்திப்பு

- ஒரு நாள், சல்மான் தனது எஜமானரிடம் வேலை செய்து கொண்டிருந்தபோது, நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்ததைக் கேள்விப்பட்டார். அவரது உற்சாகத்தை மறைக்க முடியாமல், அவர் தனது அனைத்து கருவிகளையும் கீழே போட்டுவிட்டு, நபி (ஸல்) அவர்களை பார்க்க தனது எஜமானரின் வீட்டை விட்டு வெளியேற முயற்சித்தார்.

- அவரது எஜமானர் சல்மானைப் பிடித்து, அவரது முகத்தில் அறைந்து, கொடுக்கப்பட்ட பணியை முடிக்க அவரை கட்டளையிட்டார்.

- சல்மான் தனது வேலையை தொடர்ந்து செய்து, பணிகளை முடித்த பிறகு, தனது பேரீச்சம்பழங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களைப் பார்க்க செல்கிறார்.



- அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்து, நபியவர்களிடம் பேரீச்சம்பழங்களைக் கொடுத்து, ‘இது உங்களுக்கான தர்மம்’ என்று கூறுகிறார்.

- நபிகள் நாயகம் (ஸல்) தனது தோழர்களுக்கு அந்த பேரீச்சம்பழங்களை வழங்குகினார்கள். ஆனால் அவற்றில் ஒன்றைக்கூட அவர்கள் சாப்பிடவில்லை. இதைக்கண்ட சல்மான் உற்சாகமாகிவிட்டார்.

- அடுத்த நாள், சல்மான் அதிக பேரிச்சம்பழங்களுடன் நபியவர்களிடம் வந்து அதை பரிசாக வழங்குகிறார். நபியவர்கள் அவற்றைத் தம் தோழர்களுக்கு வழங்கி, தானும் அந்த பேரீச்சம்பழத்தை உண்கிறார்கள்.

- சல்மான் இரண்டு அடையாளங்கள் சரியாய் இருந்ததால் அதிக உற்சாகமடைந்தார். மேலும் அவர் எழுந்து நின்று நபியின் பின்னால் சென்று அவரது முதுகைப் பார்க்க முயற்சிக்கிறார்.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைப் புரிந்துகொண்டு, தனது சட்டையை முதுகில் இருந்து இறக்கினார்கள். நபி (ஸல்) அவர்களின் முதுகில் இருந்த அந்த உடல் அடையாளத்தை சல்மானால் பார்க்க முடிந்தது.

- இதைப் பார்த்தவுடன் சல்மான், கதறி அழுது, அலரத் தொடங்கிவிட்டார். மேலும் நபி (ஸல்) அவர்களின் கையை எடுத்து முத்தமிட்டு தனது முழு கதையையும் விளக்குகிறார்.

- சல்மானை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் முடிவு செய்கிறார்கள். சல்மானை விடுவிக்க உரிமையாளர் கேட்ட விலை அபத்தமானதாக, சுமார் 150 பேரீச்சம்பழ மரங்களைக் கேட்டார்.

- பேரீச்சம்பழம் நடும் பருவம் வந்ததும், நபி (ஸல்) அவர்களே சல்மானுக்காக பேரீச்சம் பழ மரங்களை நட்டு, அடுத்த வருடத்தில் அவை முழுவதுமாக வளர்ந்த மரங்களாகியபின், அதனை உரிமையாளருக்குக் கொடுத்து சல்மானை விடுதலை பெறச்செய்தார்கள்.

- சல்மானின் வரலாறு நபிகள் மதீனாவுக்கு வந்தபோது அசல் கிறிஸ்தவர்கள் எவ்வளவு குறைவாக இருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

- இந்த மோசமான இருள் காலத்தில், யூதர்கள் எங்கும் சிதறி, துன்புறுத்தப்பட்ட நிலையிலும், கிறிஸ்தவர்கள் திரித்துவத்தின் புதிய இறையியலை ஏற்று, அதை மக்கள் மீது திணித்தும், ஜோராஸ்டிர மதத்தை பின்பற்றும் மக்கள் நெருப்பை வணங்கியும், மற்றும் பெரும்பான்மையான அரபு குடும்பங்கள் சிலைகளை வணங்கியும் இருந்தார்கள். இவ்வாறாக உலகம் முழுவதும் ஜாஹிலிய்யா அல்லது அறியாமை நிலையில் இருந்த போது, அல்லாஹ் நமது நபி (ஸல்) அவர்களை இவ்வுலகுக்கு அனுப்பினான்.

- முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வருகை முழு உலகத்திற்கும் கருணையாக உள்ளது என்பதை குர்ஆனில் மிக அழகாக அல்லாஹ் கூறுகிறான்: ''வமா அர்சல்னக இல்லா ரஹ்மத்தால் லில் ஆலமீன்''. ''நபியே! நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட் கொடையாகவே அனுப்பியுள்ளோம்''. - அல்குர்ஆன் (அல்அன்பியா 21:107)